www.shaivism.org

தலம் திருமுதுகுன்றம்
பண் நட்டராகம்
ஏழாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பொன்செய்த மேனியினீர்
புலித்தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும்
மெரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள்
பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள்
அடியேன் இட் டளங்கெடவே

உம்பரும் வானவரும்
உடனேநிற்க வேயெனக்குச்
செம்பொனைத் தந்தருளித்
திகழும்முது குன்றமர்ந்தீர்

வம்பம ருங்குழலாள்
பரவையிவள் வாடுகின்றாள்
எம்பெரு மான் அருளீர்
அடியேன் இட் டளங்கெடவே

பத்தா பத்தர்களுக்
கருள்செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே
முதுகுன்றம் அமர்ந்தவனே
மைத்தா ருந்தடங்கண்
பரவையிவள் வாடாமே
அத்தா தந்தருளாய்
அடியேன் இட் டளங்கெடவே

மங்கையொர் கூறமர்ந்தீர்
மறைநான்கும் விரித்துகந்தீர் (1)
திங்கள் சடைக்கணிந்தீர்
திகழும்முது குன்றமர்ந்தீர்
கொங்கைநல் லாள்பரவை
குணங்கொண்டிருந் தாள்முகப்பே
அங்கண னேயருளாய்
அடியேன் இட் டளங்கெடவே

மையா ரும்மிடற்றாய்
மருவார்புரம் முன்றெரித்த
செய்யார் மேனியனே

திகழும்முது குன்றமர்ந்தாய்
பையா ரும்மரவே
ரல்குலாள் இவள் வாடுகின்றாள்
ஐயா தந்தருளாய்
அடியேன் இட் டளங்கெடவே

நெடியான் நான்முகனும்
இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்திறைஞ்ச
முதுகுன்றம் அமர்ந்தவனே
படியா ரும்மியலாள்
பரவையிவள் தன்முகப்பே
அடிகேள் தந்தருளீர் (2)
அடியேன் இட் டளங்கெடவே

கொந்தண வும்பொழில்சூழ்
குளிர்மாமதில் மாளிகைமேல்
வந்தண வும்மதிசேர்
சடைமாமுது குன்றுடையாய்
பந்தண வும்விரலாள்
பரவையிவள் தன்முகப்பே
அந்தண னேயருளாய்
அடியேன் இட் டளங்கெடவே

பரசா ருங்கரவா
பதினெண்கண முஞ்சூழ

முரசார் வந்ததிர
   முதுகுன்றம் அமர்ந்தவனே
விரைசே ருங்குழலாள்
   பரவையிவள் தன்முகப்பே
அரசே தந்தருளாய்
   அடியேன் இட் டளங்கெடவே

ஏத்தா திருந்தறியேன்
   இமையோர்தனி நாயகனே
முத்தாய் உலகுக்கெல்லாம்
   முதுகுன்றம் அமர்ந்தவனே
பூத்தா ருங்குழலாள்
   பரவையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய்
   கொடியேன் இட் டளங்கெடவே

பிறையா ருஞ்சடைஎம்
   பெருமான் அருளாய் என்று
முறையால் வந்தமரர்
   வணங்கும்முது குன்றர்தம்மை
மறையார் தங்குரிசில்
   வயல்நாவலா ரூரன்சொன்ன
இறையார் பாடல்வல்லார்க்
   கெளிதாஞ்சிவ லோகமதே

திருச்சிற்றம்பலம்

(1) விரித்துரைத்தீர்
(2) தந்தருளாய்

www.shaivism.org